செ.வெ.எண்:45/ஏப்ரல்/2019 நாள்:27.04.2019

2019 – 2020 ம் கல்வியாண்டில் விளையாட்டு விடுதிகளில் மாணவ/மாணவிகள் சேருவதற்கு விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.சு. சிவராசு, இ.ஆ.ப. அவர்கள் தகவல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகயர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப நல்ல பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய 29 விளையாட்டு விடுதிகள் மற்றும் 5 விளையாட்டுப் பள்ளிகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்கான விளையாட்டு விடுதிகள் : மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், கடலூர், தஞ்சாவூர், அரியலூர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், உதகமண்டலம், விழுப்புரம், என்.எல்.சி.பள்ளி–நெய்வேலி, அரசு மேல்நிலைப்பள்ளி–புதூர்–சென்னை, செல்வம் மேல்நிலைப்பள்ளி–நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மாணவியருக்கான விளையாட்டு விடுதி : ஈரோடு, திருவண்ணாமலை, நாமக்கல், திண்டுக்கல், நாகர்கோவில், பெரம்பலூர், தேனி, புதுக்கோட்டை, தருமபுரி, நேரு உள்விளையாட்டரங்கம்–சென்னை, பாரதி வித்யாபவன்–திண்டல்–ஈரோடு, செல்வம் மேனிலைப்பள்ளி–நாமக்கல் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

மேற்காணும் விளையாட்டு விடுதிகளில் உள்ள பின் வரும் விளையாட்டுகளில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரராக விளங்குவதற்கு 7–ம் வகுப்பு, 8–ம் வகுப்பு, 9–ம் வகுப்பு மற்றும் 11–ம் வகுப்பு ஆகிய வகுப்புகளில் மாணவ / மாணவியருக்கான மாவட்ட அளவிலான தேர்வு போட்டி 10.05.2019 அன்று காலை 7.00 மணியளவில் அண்ணா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மாணவர்

1. தடகளம் 2. இறகுப்பந்து 3. கூடைப்பந்து 4. குத்துச்சண்டை 5. கிரிக்கெட் 6. கால்பந்து 7. வாள்சண்டை 8. ஜிம்னாஸ்டிக்ஸ் 9. கைப்பந்து 10. ஹாக்கி 11. நீச்சல் 12. டேக்வோண்டோ 13. வாலிபால் 14. பளுதூக்குதல் 15.கபாடி 16. மேசைப்பந்து 17. டென்னிஸ் 18. ஜீடோ 19. ஸ்குவாஷ் மற்றும் 20.வில்வித்தை

மாணவியர்

1. தடகளம் 2. இறகுப்பந்து 3. கூடைப்பந்து 4. குத்துச்சண்டை 5. கால்பந்து 6. வாள்சண்டை 7. கைப்பந்து 8. ஹாக்கி 9. நீச்சல் 10. டேக்வோண்டோ 11. வாலிபால் 12. பளுதூக்குதல் 13.கபாடி 14. டென்னிஸ் 15. ஜீடோ மற்றும் 16. ஸ்குவாஷ்

மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் உள்ள மாணவ / மாணவியர் 2019–2020 ஆம் ஆண்டு சேர்க்கைக்கு உரிய படிவங்களை 26.04.2019 முதல் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பூர்த்தி செய்து 07.05.2019 மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலு□ □வர□களு□கு மாவட்ட □ளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவல□ அண்ணா □ளையாட்டு அர□க□ □ருச்□ரா□பள்ளி (தொலைபே□ எண்.0431–2420685) என்ற எண்ணில் தொட□□கொள்ளலா□.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.